வேலை குறித்த வேதாகமத்தின் கண்ணோட்டம்

ஆசிஷ் ராய்ச்சூர்

இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட் ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, இந்தியா, பெங்களூர்.

தற்போதைய பதிப்பு: 2024

தகவல் தொடர்புக்கு

All Peoples Church & World Outreach,
319, 2nd floor, 7th main, HRBR layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043,
Karnataka, INDIA.

தொலைபேசி: +91-80-25452617
மின்னஞ்சல்: bookrequest@apcwo.org
இணையதளம்: apcwo.org

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (BSI), தமிழ் பழைய பதிப்பு - நியூ ஆர்த்தோ) எடுக்கப்பட்டு, பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா மூலமாக வெளியிடப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

நிதி பங்குதாரர்கள்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து **apcwo.org/give** என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள "ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்" என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்
பிரசங்கங்கள்: apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
திருச்சபை செயலி: apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
மின்வழி கற்றல்: apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
இசை: apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்: apcworldmissions.org

(Tamil — Biblical Attitude Towards Work)

வேலை குறித்த வேதாகமத்தின் கண்ணோட்டம்

பொருளடக்கம்

1. வேலை செய்ய வேண்டும் என்பது தேவனுடைய யோசனை 1

2. வேலையைக் குறித்த தவறான கண்ணோட்டம் 4

3. வேலையைக் குறித்த ஒரு விசுவாசியின் பார்வை 8

4. விசுவாசிகள் வேலை செய்யும்படி கட்டளையிடப்பட்டுள்ளனர் 14

5. ஏழு சரியான கண்ணோட்டங்கள் 26

6. உங்கள் வேலையைக் குறித்த வாக்குத்தத்தங்கள் 32

7. புதிய உலகில் வேலை செய்தல் 36

1

வேலை செய்ய வேண்டும் என்பது தேவனுடைய யோசனை

ஆதியாகமம் 1:31

அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று.

ஆதியாகமம் 2:1-3

1 இவ்விதமாக வானமும் பூமியும், அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன.

2 தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்.

3 தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

இங்கே, தேவன் வேலை செய்வதை நாம் பார்க்கிறோம். அவர் ஆறு நாட்கள் வேலை செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். மனிதர்களாகிய நாம் வேலை செய்து களைத்து ஓய்வு எடுப்பதைப்போல அல்ல. அவர் தாம் செய்ய வேண்டிய வேலையாகிய, சிருஷ்டிப்பு என்ற வேலையை ஆறு நாட்களில் செய்து முடித்தார் என்பதையே இது குறிக்கிறது. அவர் ஒவ்வொரு நாளும் தாம் செய்திருந்த வேலை நன்றாகவும் முழுமையாகவும் இருந்தது என்று பார்த்தார். ஆகவே, அவர் சற்று ஓய்வெடுத்தார்.

ஆனால், ஆதாம் பாவத்தில் விழுந்தவுடனேயே அவர் மீண்டும் வேலை செய்யத் துவங்குகிறார். இருப்பினும், இந்தமுறை அவர் செய்த வேலை, மனிதர்களை

மீண்டும் தன்னிடம் கொண்டுவந்து சேர்ப்பதற்கான மீட்பின் வேலையாகும். அன்று முதல், தேவன் தமது மீட்பின் திட்டத்தை மனுக்குலத்துக்கு வெளிப்படுத்தி, தொடர்ந்து கிரியை செய்து வருகிறார். தேவன் கிரியை செய்துகொண்டுதான் இருக்கிறார்!

ஆதியாகமம் 2:15
தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்.

தேவன் ஆதாமைப் படைத்து, ஏதேன் தோட்டத்தில் குடியிருக்கச் சொல்லிவிட்டு, "ஆதாமே! நீ செய்ய வேண்டியதெல்லாம் என்னை ஆராதிப்பது மட்டுமே!" என்று சொல்லவில்லை. ஆதாம், பாவத்தில் வீழ்வதற்கு முன்பே, தேவன் அவனுக்கு ஒரு வேலையைக் கொடுத்திருந்தார். நிலத்தைப் பண்படுத்தி தோட்டத்தை நேர்த்தியாக வைத்திருக்க வேண்டும் (ஆதியாகமம் 2:15) என்பதுதான் தேவன் ஆதாமுக்குக் கொடுத்த வேலை.

இதுவே அவனுடைய வேலையாக இருந்தது. இப்படியாக முதல் மனிதன் பாவத்தில் வீழ்வதற்கு முன்பே, தேவன் அவனுக்கு வேலை என்ற ஒன்றை அறிமுகப்படுத்துகிறார்.

அவன் பாவத்தில் வீழ்ந்த பின்பு, பூமி சபிக்கப்பட்டுவிட்டது என்பதையும், பலனைப் பெற இன்னும் கடினமாக உழைக்க வேண்டும் என்பதையும் பொருட்படுத்தாமல், ஆதாம் தொடர்ந்து நிலத்தைப் பண்படுத்த வேண்டியிருந்தது (ஆதியாகமம் 3:17-19). திருமணம் தேவனால் ஏற்படுத்தப்பட்டது என்பதை நாம் அனைவருமே நம்பி, அதை அனுபவிக்கிறோம். அதுபோல, திருச்சபை என்பதும் தேவனால் ஏற்படுத்தப்பட்டது என்பதை அறிந்து, அதையும் சந்தோஷமாக அனுபவிக்கிறோம்.

அதுபோலவே, வேலை தேவனால் ஏற்படுத்தப்பட்டது என்பது நமக்கு ஒரு நல்ல செய்தியாகும். வேலையை தேவன் ஏற்படுத்தினபடியால், அதையும் நாம் சந்தோஷமாகச் செய்ய வேண்டும்.

2

வேலையைக் குறித்த தவறான கண்ணோட்டம்

வேலையை ஒரு தடையாக கருதுகிறோம்

நம்மில் அநேகர், தேவனுடைய நோக்கத்தையும், திட்டங்களையும் நிறைவேற்றுவதில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாக இருக்கிறோம். அதே நேரத்தில் நாம் வாரத்தில் ஐந்து அல்லது ஆறு நாட்கள் "வேலைக்குப்" போக வேண்டியுள்ளது. அந்த நேரங்களில், "எனக்கு இந்த வேலை மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், நான் இயேசுவுக்காக எவ்வளவு சுதந்திரமாக ஊழியங்கள் செய்வேன்" என்று யோசிக்கலாம். இவ்வாறாக, பரம அழைப்பை நிறைவேற்ற, நம்முடைய வேலையோ அல்லது தொழிலோ ஒரு பெரிய தடையாக இருப்பதாக சிலர் நினைக்கலாம். இது தவறான எண்ணமாகும். ஏனெனில், நாம் முழுநேர ஊழியத்தில் உள்ளவர்களாக இருந்தாலும், இந்தப் பூமியில் உயிர்வாழும்வரை வேலை செய்ய வேண்டும் என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நான் பெங்களூருவில் உள்ள பிஷப் காட்டன் ஆண்கள் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது, எனது 12வது வயதில் இரட்சிக்கப்பட்டேன். அப்பொழுதிலிருந்தே கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம், நான் இயேசுவுக்காய் வைராக்கியமாகப் பிரசங்கித்து வந்தேன். சிலநேரங்களில், இயேசுவைப் பற்றிப் பிரசங்கிக்கும் வாய்ப்புகளை நானே ஏற்படுத்திக்கொண்டேன். அப்படியாக, நான் என் வகுப்பறையில் முன்பகுதிக்குச் சென்று, மாணவர்கள் அனைவருக்கும் இயேசுவைப் பற்றிப் பிரசங்கித்ததை

இப்பொழுது நினைத்துப் பார்க்கிறேன். எனது பள்ளிக்கு மட்டுமல்லாமல், பால்ட்வின் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, கத்தீட்ரல் பள்ளி என்று அருகில் இருந்த மேலும் இரண்டு பள்ளிகளுக்கும் சென்று, இயேசுவைப் பற்றிப் பிரசங்கித்து வந்தேன். இருப்பினும், "வளர்ந்துகொண்டிருந்த" ஊழியங்களுக்கு, என்னுடைய பள்ளிப்படிப்பு ஒரு மிகப்பெரிய தடையாக இருந்ததாக உணர்ந்தேன். படிப்பை ஒரு ஆசீர்வாதமாகக் கருதாமல், தடையாக நினைத்து வந்தேன். அப்பொழுது என் மனதுக்குள், 'தேவனே! படிப்பு என்ற இந்த பாரத்திலிருந்து நீர் என்னை விடுவியும். கர்த்தாவே, பள்ளிக்குச் சென்று பாடம் படிப்பதிலிருந்து நீர் என்னை விடுவித்தால், என்னால் உம்முடைய ராஜ்யத்திற்கு அதிகமான பணிகளைச் செய்யவும், இன்னும் அநேக ஜனங்களிடத்தில் இயேசுவைப் பற்றிச் சொல்லவும் முடியும்' என இரகசியமாய் ஜெபித்து வந்தேன். அவ்வாறாக, அன்று நான் ஜெபித்த ஜெபத்தைக் கேட்டு, படிப்பிலிருந்து என்னை விடுவிக்காததை நினைத்து, இப்பொழுது அவருக்கு நன்றி சொல்கிறேன்! ஆகவே, நான் பள்ளிப் படிப்பை முழுவதுமாக முடித்து, பொறியியல் கல்லூரியில் சேர்ந்து படித்தேன், காலங்கள் கடந்த பின்புதான், படிப்பு எவ்வளவு முக்கியம் என்பதைப் புரிந்துகொண்டேன். ஆகவே, என் ஜெபத்தைக் கேட்டுப் படிப்பை இடையில் விட்டுவிட தேவன் அனுமதிக்காததை நினைத்து நான் அவருக்கு நன்றி சொல்கிறேன். ஆனால், அந்த நாட்களில், தேவனுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு படிப்பு ஒரு தடையாக இருந்ததாக நான் உணர்ந்ததைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். எப்படியெனில், வேதாகமம் வாசிப்பது, ஜெபிப்பது, சாட்சி சொல்வது, பிரசங்கிப்பது ஆகியவற்றைவிட, பாடப் புத்தகங்களில் உள்ள எல்லாவற்றையும் படிப்பது, வீட்டுப்பாடங்களை முடிப்பது, பரீட்சை எழுதுவது ஆகியவை அவ்வளவு முக்கியம் இல்லை என்பதாகத் தோன்றியது. ஆனால், அநேக

நாட்களுக்குப் பின்புதான், வேலை குறித்த இதுபோன்ற எண்ணங்கள் தவறானது என்பதை நான் உணர்ந்தேன்.

வேலையை ஒரு அடிமைத்தனமாகக் கருதுகிறோம்

சிலர் வேலையை ஒரு அடிமைத்தனமாகக் கருதுகிறார்கள். ஒரு வேலைக்காரனைப்போலவும், அடிமையைப்போலவும் அதில் சிக்கிக்கொண்டதாக நினைக்கிறார்கள். 'நான் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், தினமும் காலையில் எழுந்து வேலைக்குப் போகவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேனே!' என்று அவர்கள் நினைக்கிறார்கள். பணியிடத்தில், அங்குள்ள சில கட்டுப்பாடுகள் நமது வேலையை இன்னும் கடினமாக்கலாம். நாம் வேலை செய்யும் இடங்களைப் பொறுத்து, காலை 9 மணிக்கே அலுவலகத்தில் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம், வேலை முடிய மாலை 6 மணி அல்லது 7 மணிகூட ஆகலாம். வேலை நேரங்களில் நாம் குறிப்பிட்ட சில காரியங்களைச் செய்வதற்கு மட்டுமே நமக்கு அனுமதி இருக்கும்; மற்ற காரியங்களைச் செய்வதற்கு நமக்கு அனுமதி இருக்காது. இவற்றின் நிமித்தம் சிலர் தங்களது வேலையை ஒரு அடிமைத்தனமாகப் பார்க்கிறார்கள். நம்மில் சிலர், இப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் அதிகாரங்களை எதிர்த்துக் கலகம் செய்கிறோம்.

ஆனால், அலுவலகங்களில் இதுபோன்ற சட்டதிட்டங்கள் நம்மை அடிமைப்படுத்துவதற்காக அல்லாமல், நம்மை ஒழுங்குபடுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அடிமைத்தனத்திற்கும் ஒழுங்குபடுத்துதலுக்கும் உள்ள வித்தியாசங்களை நாம் கவனிக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் நாம் விடுதலையோடும், சுதந்திரமாகவும் செயல்படுவதற்கு நமக்கு உரிமை இருக்கிறது (கலாத்தியர் 2:4, கலாத்தியர் 5:1; 2 கொரிந்தியர் 3:17). அதே நேரத்தில்,

கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கும் அந்த சுதந்திரத்திற்கு எல்லைகளும் கட்டுப்பாடுகளும் இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் (கலாத்தியர் 5:13). ஆகவே, நாம் விரும்புகிற எல்லாவற்றையும் நம்மால் செய்ய முடியாது. எனவே வேலையை நாம் ஒரு அடிமைத்தனமாக நினைக்காமல், நம்மை ஒழுங்குபடுத்துவதற்குக் கிடைத்த நல்ல வாய்ப்பாகக் கருதவேண்டும்.

வேலையைத் தவிர்க்க முடியாத தீமையாக கருதுகிறோம்

சிலர் வேலையைத் தீமையாகவும், கட்டணங்களைச் செலுத்தித் தீர்ப்பதற்கு அவசியமாய் நாம் செய்ய வேண்டிய ஒரு காரியமாகவும் நினைக்கிறார்கள். நாம் சாப்பிடவும், குடும்பத் தேவைகளை நிறைவேற்றவும் வேலை செய்ய வேண்டும் என்பது உண்மைதான். இருந்தபோதிலும், சிலர் தாங்கள் செய்கிற வேலையை சந்தோஷமாக அனுபவிப்பதில்லை; அதற்குப் பதிலாக, குறைசொல்லி முறுமுறுக்கிறார்கள். குறிப்பாக, விசுவாசிகளாகிய நாம் வேலையை சந்தோஷமாக அனுபவித்து மகிழ வேண்டும். அதைத் தீமையாக நினைக்கக் கூடாது.

வேலையை தெய்வ வழிபாடாகக் கருதுகிறார்கள்

சிலர், செய்யும் தொழிலே தெய்வம் என்ற தவறான எண்ணத்தைக் கொண்டிருந்து, எப்பொழுதும் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். நமது தற்போதய கலாச்சாரத்தில் இந்த எண்ணம் மேலோங்குகிறது. ஏனெனில், வேலை என்பது தெய்வ வழிபாடு அல்ல: ஏனெனில், தெய்வ வழிபாடு என்பது தேவனுடனான ஐக்கியமாகும். தேவனைப் பற்றி நினைக்காமலேயே, உங்கள் வேலைகளை உங்களால் செய்ய முடியும்.

3
வேலையைக் குறித்த ஒரு விசுவாசியின் பார்வை

ஒரு விசுவாசியாக வேலையைக் குறித்த நம்முடைய பார்வை எப்படி இருக்க வேண்டும்? தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற வேலை, தொழில், பதவியை நாம் எப்படிப் பார்க்க வேண்டும்? இந்த மூன்று கண்ணோட்டங்களும், ஒவ்வொரு விசுவாசிக்கும் மிகவும் முக்கியமானது என்று நான் கருதுகிறேன்.

வேலை ஒரு வாகனம்

நாம் செய்யும் வேலை, தொழில் அல்லது பதவி என்பது தேவனுடைய நோக்கத்தை இந்தப் பூமியில் நிறைவேற்றுவதற்கான ஒரு வாகனமாக இருக்கிறது. இது தேவனுடைய நோக்கத்தைப் பூமியில் நிறைவேற்றுவதற்கான ஒரு வாகனம் ஆகும். சொல்ல வேண்டுமானால், வேலை என்பது ஒருவருடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்றும் கருவியாக இருக்கிறது. சிலர் முழுநேர ஊழியத்திற்கு அழைக்கப்படுகிறார்கள் என்பதை நான் புரிந்துகொள்கிறேன், ஆனால் முழுநேர ஊழியமும் ஒரு விதத்தில் “வேலை” எனலாம்.

வேலை ஒரு செயல்திட்டம்

நமது வேலையானது தேவனுடைய நோக்கத்தையும் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கான அவருடைய செயல்திட்டத்தின் ஒரு பகுதி என்பதைப் புரிந்துகொண்டு,

அதை நாம் அவ்வாறு பார்க்க வேண்டும். உதாரணத்திற்கு, ஒரு விசுவாசியாக, மக்களைக் கர்த்தருக்காக ஆதாயப்படுத்துகிற தாகத்தோடு நீங்கள் இருக்கலாம். நீங்கள் செய்கிற தொழிலோ அல்லது வேலையோ, உங்களால் ஒருபோதும் சந்திக்க வாய்ப்பில்லாத மக்களை நீங்கள் சந்திப்பதற்கான வாய்ப்பை உங்களுக்கு ஏற்படுத்தித் தரும். ஆகவே, உங்கள் வேலையையே தேவன் உங்களுக்குக் கொடுத்த செயல்திட்டமாக நீங்கள் கருத வேண்டும். உங்கள் மூலம் தேவன் யாரைக் கிறிஸ்துவுக்குள் கொண்டுவர நினைக்கிறாரோ, அவர்களை உங்கள் வேலை மற்றும் தொழில் மூலம் இணைக்க அவர் உங்கள் தொழிலைப் பயன்படுத்துகிறார். தன்னுடைய திட்டத்தை அவ்வாறாக செயல்முறையில் கொண்டு வருகிறார். உங்களது வேலை ஸ்தலம்தான் உங்களது பிரசங்க மேடை; தேவன் உங்களை எந்த மக்களைச் சந்திக்க வைக்கிறாரோ, அவர்கள்தான் உங்கள் சபையார்கள்.

வேலை என்பது ஆயத்தமாகும் செயல்முறை

வேலை ஸ்தலம் என்பது பணம் சம்பாதிப்பதற்கான இடம் மாத்திரம் அல்ல; நம்முடைய குணநலன்களை உருவாக்கும் இடமாகவும் தேவன் அதைப் பயன்படுத்துகிறார். அது நமது ஆயத்தமாகும் செயல்முறைக்கான ஒரு பகுதியாகும். ஞாயிறு பள்ளி, திருச்சபைகள் மற்றும் வேதாகம பள்ளிகள் மூலமாகத்தான் தேவன் நம்முடைய வாழ்க்கையில் நல்ல குணநலன்களை உருவாக்குகிறார் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் எல்லா இடங்களிலும், நம் வாழ்வில் அவருடைய குணங்கள் வரும்படியாக செயல்படுகிறார் என்பதே உண்மை. அவர் நம் வாழ்வில் 24 மணி நேரமும் கிரியை செய்கிறார்.

நமது பணியிடங்களில், எவ்வாறு மக்களுடன் பழகுவது, வெவ்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்துகொள்வது,

எவ்வாறு தெய்வீக ஞானத்தைப் பெறுவது மற்றும் எவ்வாறு பிரச்சனைகளைத் தீர்ப்பது ஆகியவற்றை தேவனால் நமக்குப் போதிக்க முடியும். நாம் வேலை செய்கிற இடங்களில், நம்மால் ஒத்துப்போக முடியாத சிலர், நம் உடலில் குத்தும் முட்கள்போல, தொடர்புகொள்ள முடியாத மனிதர்களாக இருப்பதைக் காணலாம்; ஆனால் நமக்குள் உள்ள நல்ல குணங்களை அதே இடத்திலிருந்து தேவனால் உருவாக்க முடியும். மேலும், நமது பணியிடங்களில், புதிய யுக்திகளைக் கற்றுக்கொள்வதற்கும், தேவன் தம்முடைய ராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காகப் பயன்படுத்தக்கூடிய நமது திறன்களை வளர்த்துக் கொள்வதற்குமான வாய்ப்பு நமக்குக் கிடைக்கலாம். உதாரணத்திற்கு, தலைமைத்துவ திறன்களை உங்கள் வேலை ஸ்தலத்தில் கற்றுக்கொள்ளலாம், தேவன் உங்கள் உள்ளூர் திருச்சபைகளில் ஒரு குறிப்பிட்ட ஊழியத்திற்காக அந்தத் திறமைகளைப் பயன்படுத்தி, இவ்வாறு, சபைகளில் தேவன் உங்களை ஆசீர்வாதமான பாத்திரமாக மாற்றக் கூடும்.

தேவன் பயன்படுத்திய சில மனுஷர்களை வேதாகமத்தில் நாம் பார்க்கலாம்.

யோசேப்பு

தீர்க்கதரிசன சொப்பனம் மற்றும் திட்டத்தை நிறைவேற்றுதல்

யோசேப்பின் வாழ்க்கையை நினைத்துப்பாருங்கள்; தேவன் அவனுக்கு தரிசனத்தையும், சொப்பனத்தையும் கொடுத்திருந்தார். ஆனால், அவன் எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு “முழுநேர ஊழியத்திற்கு” வரவில்லை. தன்னுடைய திட்டங்களுக்காக தேவன் அவனை உருவாக்கும் பாதைகளில் அவன் பயணித்தான். அந்தப் பாதையில், போத்திபார் வீட்டில் அவனுக்குக்

கொடுக்கப்பட்ட வேலைகள் அனைத்தையும் செய்யும்படி அவன் கட்டாயப்படுத்தப்பட்டான். அங்கிருந்து, தான் செய்யாத குற்றத்திற்காக சிறைக்குள் தள்ளப்பட்டான். சிறையில் இருந்தபொழுதும், அவன் வேலை செய்ய வேண்டியிருந்தது. சிறையிலிருந்த மற்ற கைதிகளுக்கு மேலாக அவன் தலைவனாக ஏற்படுத்தப்பட்டான். பின்பு, எகிப்து நாட்டு பிரதம மந்திரியாக உயர்த்தப்பட்டு, தன் வேலைகளைத் தொடருகிறான். யோசேப்பு ஒரு முழுநேர ஊழியனாக அழைக்கப்படாவிட்டாலும், தம்முடைய தெய்வீகத் திட்டங்களை நிறைவேற்றும்படி தேவன் அவனை ஏற்படுத்தி நிலைநாட்டினார். யோசேப்பு எகிப்து தேசத்தின் பிரதம மந்திரியாக இருந்து வேலை செய்தான், ஆகவே அவன் சிறுவனாக இருந்தபொழுது, அவனுக்குக் கொடுத்திருந்த சொப்பனத்தை நிறைவேற்ற தேவன் அதைப் பயன்படுத்தினார். தேவன் கொடுத்த பிரதம மந்திரி பதவியை யோசேப்பு விட்டுவிட்டு, நான் தேவனுக்கு ஊழியம் செய்ய காடுகளுக்குள் சன்னியாசியாகப் போகிறேன் என்று சொல்லியிருந்தால் எப்படியிருந்திருக்கும்? ஒருவேளை அவன் அப்படிச் செய்திருந்தால், அவன் சிறுவயதாக இருந்தபோது, தேவன் அவனுக்குக் கொடுத்திருந்த சொப்பனம் ஒருபோதும் நிறைவேறியிருக்காது.

இந்த உண்மையை சற்று சிந்தித்துப்பாருங்கள். யோசேப்பு பிறப்பதற்கு அநேக வருடங்களுக்கு முன்பாகவே, அவனுடைய சந்ததியை அந்நிய நாட்டிற்குக் கூட்டிக்கொண்டு போவதாக தேவன் ஆபிரகாமிடம் சொல்கிறார். *“அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி: உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய். இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்; பின்பு மிகுந்த பொருள்களுடனே*

புறப்பட்டு வருவார்கள்" (ஆதியாகமம் 15:13,14). இந்தத் தீர்க்கதரிசன திட்டத்தை யோசேப்பு நிறைவேற்றும்படிக்கு, தாம் அவனுக்குக் கொடுத்த திறமைகளையும் "தொழில்முறை" வாழ்க்கையையும் அவனைப் பதவியில் நிலைநாட்டுவதற்கான ஒரு வாகனமாக தேவன் பயன்படுத்தினார்.

நம்மில் அநேகர் சமுதாயங்களையும், நகரங்களையும் தேசங்களையும் குறித்து தேவன் வைத்திருக்கும் தீர்க்கதரிசனத் திட்டங்களை அறியாதவர்களாகவே வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். ஒவ்வொரு சமுதாயங்களிலும், நகரங்களிலும் மற்றும் தேசங்களிலும் தேவ திட்டங்கள் நிறைவேறும் வாய்ப்புகளுக்கான கதவுகள் திறக்கப்படும்படிக்கு தேவனிடத்தில் 'கெய்ரோஸ்' தருணங்களும் தெய்வீக நுழைவுக்கான பாதைகளும் உண்டு. (கெய்ரோஸ் [கிரேக்கம்] என்பது சிறப்பு நிகழ்வுகள், வாய்ப்புகளுக்கான தருணங்கள், முக்கியமான நிகழ்வுகள் மற்றும் கால மாற்றங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது) ஆகவே, ஒவ்வொரு சமுதாயங்களிலும், நகரங்களிலும், நாடுகளிலும் தம்முடைய தீர்க்கதரிசன திட்டங்களை நிறைவேற்றும் "யோசேப்பு" போன்றவர்களை தேவன் தேடிக்கொண்டு இருக்கிறார். அவர்களுக்குக் கொடுத்த திறமைகள், வேலைகள் மற்றும் தொழில் அனுபவங்களைப் பயன்படுத்தி தேவன் தம்முடைய தீர்க்கதரிசன திட்டங்களை நிறைவேற்ற விரும்புகிறார்.

தாவீது, தானியேல், பவுல்

உலக வேலை மற்றும் தேவனுடைய ஊழியம் ஆகிய இரண்டின் இணைந்த செயல்பாடு

தாவீது ஒரு சங்கீதக்காரனும், தீர்க்கதரிசியும், ராஜாவுமாக இருந்தார். தானியேல் ஒரு தீர்க்கதரிசியாக மட்டுமல்லாமல், ஒரு நாட்டை வழிநடத்தும் பிரதம மந்திரியாகவும், ராஜாவின்

காரியங்களை விசாரிப்பவராகவும் இருந்தார். பவுலைப் பற்றி யோசித்துப் பாருங்கள். அவர் புதிய ஏற்பாட்டில் அநேக புத்தகங்களை எழுதிய சிறப்பான ஒரு அப்போஸ்தலன் என்பது நமக்குத் தெரியும். மேலும், அவர் எபேசு, கொரிந்து, தெசலோனிக்கேயா ஆகிய மூன்று நகரங்களில் இருந்த சபையாருக்கு ஊழியம் செய்தபோது, தன்னுடைய தேவைகளுக்கும், ஊழியத் தேவைகளுக்கும், அவரே சொந்தமாக வேலை செய்து சம்பாதித்தார் என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. அவர் ஊழியம் செய்த நபர்களுக்குப் பாரமாக இருக்கக்கூடாது என்று கருதி, தன்னுடைய தேவைகளுக்காகவும் உடன் ஊழியர்களின் தேவைகளுக்காகவும், தன்னுடைய சொந்தக் கைகளால் வேலை செய்ததாக அவர் கூறுகிறார்.

தாவீது, தானியேல், பவுல் போன்றவர்கள், உலகத் தேவைகளுக்கான வேலையையும், தேவனுடைய ஊழியத்தையும் ஒன்றாக செய்ததை நாம் கவனிக்கலாம். வேலையை ஒரு உலகப்பிரகாரமான விஷயமாகவும், தேவனோடு நடப்பதை ஆவிக்குரிய விஷயமாகவும், தனிப்பட்ட ஒரு வேலையாகவும் பிரித்துப் பார்க்காத இடத்திற்கு நாம் வர வேண்டும். தேவனுடனான உங்கள் சஞ்சரிப்பின் ஒரு பகுதியாக உங்கள் வேலையைக் கண்ணோக்குங்கள். இதுவே உங்கள் வாழ்விற்கான தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாகும். தாவீது, தானியேல் மற்றும் பவுல் ஆகியோர் உலக வேலைகளைச் செய்தபோதிலும், அபிஷேகத்தை இழந்துபோகவில்லை. தேவன் கிரியை செய்வதால் நீங்கள் செய்யும் வேலை “ஆவிக்குரிய” வேலையே!

4
விசுவாசிகள் வேலை செய்யும்படி கட்டளையிடப்பட்டுள்ளனர்

புதிய ஏற்பாட்டில், உலகம் முழுவதும் சென்று நற்செய்தியைப் பிரசங்கிக்க வேண்டும் என்ற மிகப்பெரிய கட்டளையை கர்த்தராகிய இயேசு விசுவாசிகளுக்குக் கொடுத்தார். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு நபரும் "உலகப்பிரகாரமான வேலைகளில்" ஈடுபடுவதை விட்டுவிட்டு, சுவிசேஷத்தை மட்டுமே பிரசங்கிக்க வேண்டும் என்ற பார்வையை புதிய ஏற்பாட்டுத் திருச்சபை கொண்டிருக்கலாம். ஆனால் விசுவாசிகள் என்ன செய்ய வேண்டும் என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுக்கு அறிவுறுத்தியதைக் கவனிப்பது மிகவும் சுவாரஸ்யமானது.

உங்களது சொந்த கைகளால் வேலை செய்யுங்கள்

எபேசியர் 4:28

திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன்.

திருடுபவர்கள் இனி திருடாமல் தன் சொந்த கையால் வேலை செய்ய வேண்டும். அவர்கள் தங்களது சொந்த கைகளால் உழைத்து, குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் சொந்த கைகளினால் சரியானதும் நலமானதுமான வேலையைச் செய்ய வேண்டும். இங்கே, பவுல் தங்கள் சொந்த கைகளால் வேலை செய்வதன் மதிப்பு அல்லது முக்கியத்துவத்தை விசுவாசிகளுக்குக் கற்பித்தார். நலமான வேலையைச் செய்ய வேண்டும் என்றும் அவர்

அறிவுறுத்தினார். விசுவாசிகள் நேர்மையற்றதும் சீர்கேடு நிறைந்ததுமான வேலையில் ஈடுபடக் கூடாது என்பதே இதன் பொருளாகும்.

உங்களுக்கு ஒன்றும் குறைவுபடாதபடிக்கு வேலை செய்யுங்கள்

1 தெசலோனிக்கேயர் 4:11,12

11 புறம்பேயிருக்கிறவர்களைப்பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு,
12 நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே, அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலைசெய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்.

விசுவாசிகளின் முறையற்ற நடத்தையைக் குறித்து இரட்சிக்கப்படாதவர்கள் குற்றம் சாட்டுவதற்கு இடமளிக்காமல், விசுவாசிகள் தங்கள் சொந்த கைகளால் வேலை செய்ய வேண்டும் என்று பவுல் கேட்டுக்கொண்டார். நம் சொந்தக் கைகளால் வேலை செய்வது என்பது நாம் எல்லாவற்றிலும் நிறைவாய் இருக்கிறோம் அல்லது நமது தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுகின்றன என்ற அர்த்தத்துடன் தொடர்புடையது என்பதையும் கவனியுங்கள். சிலர் தங்களுடைய எல்லாத் தேவைகளும் சந்திக்கப்பட "தேவனுக்காகக் காத்திருக்கிறார்கள்". நம்முடைய எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்வதாக தேவன் வாக்குத்தத்தம் அளித்திருக்கிறார் என்பது உண்மைதான், *"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்"* (பிலிப்பியர் 4:19), ஆனால் நாம் வேலை செய்ய வேண்டும் என்று தேவன் தம்முடைய வார்த்தையில் கட்டளையிட்டுள்ளார் என்பதும் உண்மைதான்; அவர் நம்முடைய வேலையை,

நமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்க்காலாகப் பயன்படுத்துவார் என்பதைத்தான் இது குறிக்கிறது. நம் வேலையின் மூலமாக தேவன் நமது தேவைகளை சந்திப்பது என்பது காகம் பணக் கட்டுகளைக் கொண்டுவந்து தருவதைப்போல இயற்கைக்கு அப்பாற்பட்டது! இது அவ்வளவு ஆச்சரியமானதாக இல்லாதிருக்கலாம், ஆனால் அது இயற்கைக்கு அப்பாற்பட்டது, ஏனென்றால் அதே தேவன்தான் நமது தேவைகளையும் சந்திக்கிறார். உங்கள் தொழில் ரீதியான வாழ்க்கை முழுவதும், ஒரு வேலையைப் பெற்றுக்கொள்வதற்கும், அதைத் தக்கவைத்துக்கொள்வதற்கும், சம்பளம் மற்றும் ஊதிய உயர்வைப் பெறுவதற்கும் தேவனுடைய கிருபையும் தெய்வீக வழங்கலும் தேவை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஜனங்கள் வந்து தங்களது கைகளில் பணத்தைக் கொடுத்தல் அல்லது அஞ்சல் வழியாக தங்களுக்குக் காசோலை வருதல் ஆகியன போன்ற "இயற்கைக்கு அப்பாற்பட்ட" வழிகளில் தேவன் அவர்களது தேவைகளைச் சந்திப்பார் என்று நினைத்துக்கொண்டு காத்திருக்கிறார்கள். இது நடப்பதை அவர்கள் காணாதபோது, தேவன் ஏன் தங்களது தேவைகளை சந்திக்கவில்லை என்று அவர்கள் அதிர்ச்சியடைகிறார்கள். இருப்பினும், அத்தகைய நபர்களுக்குக் கொடுப்பதற்காக, அவர்களுக்குச் சரியான பாதையைக் காட்டவும் சரியான வழிகளில் அவர்களை நடத்தவும் அவர் காத்துக்கொண்டிருக்கிறார். சில சந்தர்ப்பங்களில், அவர்கள் ஒரு வேலையைப் பெற்றுக்கொண்டு, சிறிது காலம் அந்த வேலையில் நிலைத்திருக்க வேண்டும் என்று தேவன் காத்திருக்கிறார். அந்த வேலையே தேவன் அவர்களது வாழ்க்கைக்குத் தேவையானவற்றைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு வழியாக அமைகிறது.

நீங்கள் வேலை செய்யாதிருந்தால், சாப்பிடவும் கூடாது!

2 தெசலோனிக்கேயர் 3:7-12

7 இன்னவிதமாய் எங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே. நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும்,

8 ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம்.

9 உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்க வேண்டுமென்றே அப்படிச் செய்தோம்.

10 ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே.

11 உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்று திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம்.

12 இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிட வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்தி சொல்லுகிறோம்.

ஒழுங்கற்றவர்களாகவும், ஒன்றும் செய்யாதவர்களாகவும், மற்றவர்களைச் சார்ந்து வாழ்கிறவர்களாகவும் இராமல், அமைதியாக வேலை செய்து, தங்கள் சொந்த உணவைப் புசிக்க வேண்டும் என்று புதிய ஏற்பாடு நமக்குக் கட்டளையிடுகிறது. வேலை செய்ய வேண்டும் என்பது புதிய ஏற்பாட்டில் விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையாகும்.

உங்கள் சொந்த வீட்டிற்குக் கொடுங்கள்

1 தீமோத்தேயு 5:8

ஆனால் ஒருவன் தனக்கும், குறிப்பாகத் தன் வீட்டாருக்கும்

கொடுக்காவிட்டால், அவன் விசுவாசத்தை மறுத்து, அவிசுவாசியைவிட மோசமானவன்.

முழுநேர ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்களுக்கு நான் ஒரு சவால் விட விரும்புகிறேன். ஊழியர்களே, நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய சில விஷயங்கள் உள்ளன; நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளைப் பற்றி தேவன் தம்முடைய வார்த்தையில் உங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இவற்றில் ஒன்றுதான் உங்கள் சொந்த வீட்டாருக்குக் கொடுப்பது. தேவனுடைய பிள்ளைகள் அவசரப்பட்டு தங்கள் வேலையை விட்டுவிட்டு, விசுவாசத்தில் வாழ்வதாகக் கூறுகின்றனர். விசுவாசத்தில் வாழ்வது என்பது வேலையை விட்டுவிடுவது அல்ல. அந்த வேலையைத் தொடர்ந்து தக்கவைக்கவும் விசுவாசம் தேவை. சில நேரங்களில், மக்கள் தங்கள் வேலையை விட்டுவிட்டு, ஊழியத்திற்குச் செல்கிறார்கள், பின்னர் தங்கள் சொந்த குடும்ப உறுப்பினர்களுக்கு உணவு போன்ற அன்றாட தேவைகளைச் சந்திக்கப் போராடுகிறார்கள். கொஞ்ச கால பாடுகளைப் பற்றி நான் பேசவில்லை, ஏனென்றால் நாம் அனைவரும் அவற்றைக் கடந்து செல்கிறோம். இருப்பினும், நீங்கள் முழுநேர ஊழியத்தில் இருப்பதால், உங்கள் குடும்பத்தின் அடிப்படைத் தேவைகள் —ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மாதமும் — சந்திக்கப்படாவிட்டால், ஊழியத்தின் மூலம் உங்கள் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்படும்வரை வேலை தேடுவதைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டும். எனவே, நீங்கள் முழுநேர ஊழியத்தில் இறங்குவதற்கு முன், உங்கள் பணத் தேவைகளையும் உங்கள் குடும்பத்தினரின் தேவைகளையும் உங்களால் பூர்த்திசெய்ய முடியும் என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் மனைவி மற்றும் குழந்தைகளை கவனித்துக்கொள்ள நீங்கள் தயாராக இல்லை என்றால் திருமணம் செய்து கொள்ளாதீர்கள். உங்கள் குடும்பத்தினரை நீங்கள் பொறுப்பாக கவனித்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் தேவனுடைய விருப்பமாகும்.

எனது சாட்சி

பெங்களூரில் எனது பள்ளிப் படிப்பின் ஆரம்ப நாட்களில், ஊழியத்தில் நான் மிகுந்த வைராக்கியமுள்ளவனாய் இருந்தேன். நான் 10-ம் வகுப்பு முடித்தவுடனேயே முழுநேர ஊழியத்தில் ஈடுபட வேண்டும் என்று ஜெபித்தேன். அவ்வாறு நான் படித்துமுடித்த உடனேயே, நான் எனது உலகப்பிரகாரமான கல்வியைத் தொடர விரும்பாமல், வேதாகமக் கல்லூரிக்குச் செல்ல விரும்புவதாகக் கூறி, சிறிது நாட்கள் என் பெற்றோருக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுத்தேன். எனவே, நான் இந்தியாவில் உள்ள வேதாகமக் கல்லூரிகளைத் தேடிப் பார்த்து, புனேவில் உள்ள ஒரு வேதாகமக் கல்லூரிக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். எனக்குக் கல்லூரியில் சேரும் வயது இன்னும் வரவில்லை என்றும், அந்தக் கல்லூரியில் சேருவதற்கான குறைந்தபட்சத் தகுதியாக 12ஆம் வகுப்பு படித்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டு, அந்தக் கல்லூரி என் கடிதத்தை எனக்குத் திருப்பி அனுப்பிவிட்டது. எனக்கு வந்த கடிதத்தால் நான் ஏமாற்றம் அடைந்தேன். எப்படியும் இன்னும் இரண்டு வருடங்கள் மட்டுமே உலகப்பிரகாரமான கல்வியைத் தொடர வேண்டும் என்பதால், அங்கு சேரத் தகுதியான கல்வியை முடித்தவுடன் வேதாகமக் கல்லூரியில் சேர்ந்துவிட முடிவு செய்தேன்.

இருப்பினும், அடுத்த இரண்டு ஆண்டுகளில், ஒரு காரியம் நடந்தது. நான் பெங்களூரில் உள்ள ஒரு குறிப்பிட்ட திருச்சபைக்குச் சென்று கொண்டிருந்தேன், அங்கே ஒரு காரியத்தைக் கவனித்தேன். அந்தத் திருச்சபையில் நான் இரண்டு குழுவினாராகிய மக்களைப் பார்த்தேன் - ஒரு குழுவினர் திருச்சபையில் பல்வேறு வழிகளில் ஊழியம் செய்து சேவை செய்துகொண்டிருந்தனர், மற்றொரு குழுவினரான, பெரும்பான்மையானவர்கள் திருச்சபைக்குச் சென்று வந்தனர், ஆனால் எந்த ஊழியத்திலும் ஈடுபடவில்லை. இரண்டாவது குழுவில் பெரும்பாலும் மாணவர்களும் தொழில்

வல்லுநர்களும் இருந்தனர்; அவர்கள் தங்கள் வேலைகளில் மிகவும் அலுவலாக இருந்ததாக நினைத்துக்கொண்டு, எல்லா வகையான ஊழியத்திலிருந்தும் தங்களைத் தாங்களே விலக்கிக்கொண்டார்கள். பெரும்பாலான "பாமர மக்கள்" ஏன் ஊழியத்தில் ஈடுபடவில்லை என்று நான் யோசித்தேன். இந்த நேரத்தில் ஒரு உறுதியான உணர்வு என் இருதயத்தைப் பற்றிக்கொண்டது. ஒருவர் ஒரு தொழிலையோ, வேலையையோ செய்து, "சாதாரண வாழ்க்கை" வாழலாம்; அப்போதும் அவர்களால் தேவனுக்கு ஊழியம் செய்ய முடியும் என்பதை என் வாழ்க்கையின் மூலம் ஜனங்களுக்கு நிரூபிக்க நான் தீர்மானித்தேன். எனவே, எனது 12 ஆம் வகுப்பை முடித்த நேரத்தில், வேதாகமக் கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்ற எனது ஆசையை நான் விட்டுவிட்டேன், அதற்குப் பதிலாக, வாழ்க்கையில் நான் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய புதிய எண்ணத்தை நான் பெற்றுக்கொண்டேன்.

இந்த நேரத்தில்தான், பெங்களூரில் ஒரு ஸ்திரமான திருச்சபையை ஸ்தாபித்து, அங்கிருந்து, இந்திய தேசத்தை சந்தித்து, உலக நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆசையை தேவன் என் இருதயத்தில் வைத்தார். எனவே, நான் எனது 12 ஆம் வகுப்பைப் படித்து முடித்தேன்; பின்னர், எனது பெற்றோர் மணிப்பாலில் உள்ள ஒரு பொறியியல் கல்லூரியில் என்னை மேற்படிப்புக்காக அனுப்பிவைத்தனர். அதற்குள் எனது படிப்பை ஒரு சுமையாகப் பார்ப்பதை நிறுத்திவிட்டு, எனது கல்வி தெய்வீக திட்டத்தின் ஒரு பகுதி என்பதை நான் புரிந்துகொள்ள ஆரம்பித்தேன். எனது கல்வியைத் தொடர்ந்ததால்தான், தேவனுடைய ராஜ்யத்திற்காக இன்னும் பலரைச் சந்திக்கக்கூடிய இடத்தில் நான் இருப்பதைக் கண்டேன்.

மணிப்பாலில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில், இந்தியா முழுவதிலுமிருந்தும் மற்றும் உலகின் மற்ற

பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான மாணவர்களை நான் பார்த்தேன். நான் அங்கு படிப்பதற்கு ஒரு ஆவிக்குரிய நோக்கம் உண்டு என்பதை நம்பினேன்.

அங்கேயே, தேவனுக்கு ஊழியம் செய்யவும் ஆத்துமாக்களை வெல்லவும் என் இருதயம் விரும்பியது. 1989ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நான் பொறியியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தபோது, மாணவர்களுக்கான ஐக்கியம் ஒன்றை ஏற்படுத்தும்படியான ஒரு முயற்சியை எடுக்க கர்த்தர் எனக்கு உதவினார், அது பின்னர் உள்ளூர் திருச்சபையாக வளர்ந்து இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது. நான் அதற்குப் பின்பு என் கல்வியை ஒரு சுமையாகவோ, அவசியமான தீமையாகவோ அல்லது அடிமைத்தனமாகவோ பார்க்கவில்லை. இது ஒரு வாகனமாகவும், தெய்வீக உத்தியாகவும் மற்றும் எதிர்கால ஊழியத்திற்கான ஆயத்த செயலாகவும் இருந்ததை நான் புரிந்துகொண்டேன். எனது இளங்கலை பொறியியல் பட்டப்படிப்பை முடித்த பிறகு, படிப்பைத் தொடர முடிவு செய்தேன். நான் மேற்படிப்புக்காக அமெரிக்கா செல்ல எனது பெற்றோர் உதவினார்கள். அங்கு எனக்கு இடம் கிடைத்த துறையான, ஓஹியோ மாநிலத்தின் கிளீவ்லேண்ட் நகரத்து பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறையானது, அமெரிக்காவில் முதல் மூன்று இடங்களில் இருந்தது. தேவனுடைய கிருபையால், எனது இரண்டாவது செமஸ்டரில் மூன்றில் இரண்டு பங்கு கல்வி உதவித் தொகை எனக்கு கிடைத்தது, எனது மூன்றாம் செமஸ்டரிலிருந்து கல்வி உதவித் தொகை முழுமையாக எனக்குக் கிடைத்தது.

பல்கலைக்கழகத்தில் படித்து ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தபோது, இந்தியா, இந்தோனேசியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களைக் கொண்ட ஒரு சிறிய சர்வதேச மாணவர்கள் ஐக்கியம் ஒன்றை என்னால் தொடங்க முடிந்தது. பின்னர், நான் நியூ ஜெர்சிக்கு

குடிபெயர்ந்து சென்று, அங்கே சுமார் 200 கிறிஸ்தவ மாணவர்களைக் கொண்ட கொரிய கிறிஸ்தவ ஐக்கிய ஊழியத்தில் ஈடுபட்டேன். இந்த கொரிய மாணவர்கள் எப்படி அவ்வளவு வைராக்கியமாக ஜெபித்தார்கள் என்பது பார்ப்பதற்கே மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

அந்த நேரத்தில், பல்கலைக்கழக வளாகத்திற்கு அருகில் அமைந்துள்ள ஒரு ஆப்பிரிக்க-அமெரிக்க திருச்சபையிலும் நான் தவறாமல் ஊழியம் செய்தேன். ஒரு வருடத்திற்கும் மேலாக, இந்த ஆப்பிரிக்க-அமெரிக்க திருச்சபையில் ஒவ்வொரு புதன்கிழமை இரவும் நான் போதித்தேன், மேலும் அவர்களின் ஞாயிறு ஆராதனைகளிலும் கூடாரக் கூட்டங்களிலும் நான் அவ்வப்போது பிரசங்கித்து வந்தேன்.

இந்தியாவிலிருந்து வந்து என்னுடன் கல்லூரியில் சேர்ந்த எமி அவர்களை நான் திருமணம் செய்துகொண்ட பிறகு, பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறி ஒரு மென்பொருள் நிபுணராகப் பணியாற்ற ஆரம்பித்தேன். அந்த நேரத்தில், எமியும் நானும் ஸ்பானிஷ் மொழி பேசும் மற்றொரு இளம் தம்பதியினருடன் இணைந்து ஊழியம் செய்து, நியூ ஜெர்சியில் உள்ள நியூ பிரன்சுவிக் நகரில் ஒரு ஸ்பானிஷ் திருச்சபையை நிறுவினோம். வேறுபட்ட கலாச்சார பின்னணியில் உள்ள பலருக்கு, மாறுபட்ட-கலாச்சார பின்னணியில் உள்ள நான் ஊழியம் செய்தது மிகவும் அற்புதமான அனுபவமாக இருந்தது. எனது பட்டப் படிப்பைத் தொடர நான் அமெரிக்கா சென்றதால்தான், அது என் எதிர்கால ஊழியத்திற்கான சிறந்த பயிற்சிக் களமாக அமைந்தது.

1998ஆம் ஆண்டு நியூ ஜெர்சியிலிருந்து, நாங்கள் சிகாகோவுக்குச் சென்றோம். 1999ல், ஊழியப் பயணமாக இந்தியாவுக்கு வந்தபோது, இந்தியாவுக்குத் திரும்பிச் சென்று எங்களது இருதயங்களில் உள்ள தரிசனத்தை

நிறைவேற்றுவதற்கான சரியான நேரம் அதுவே என்பதை நான் உணர்ந்தேன். எனவே, 2001ம் ஆண்டு ஜனவரி மாதத்தை பெங்களூருக்குத் திரும்பிச் செல்லும் மாதமாகக் குறித்து வைத்துக்கொண்டோம். சிகாகோவிலிருந்து பெங்களூருக்கு வரும் இந்த பயணத்துக்கு நாங்கள் தயாராகத் தொடங்கியபோது, இந்தியாவில் எங்களது ஊழியத்தைத் தொடங்குவதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பது என்பது எங்கள் கவலைகளில் மிகப்பிரதானமான ஒன்றாக இருந்தது. நாங்கள் சிகாகோவில் ஒரு சிறிய திருச்சபையின் ஒரு பகுதியினாராக இருந்தோம். நாங்கள் கொண்டிருந்த மிகப்பெரிய தரிசனத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான மிகப்பெரிய தொகையை அவர்களால் எங்களுக்குத் தர முடியாது. நான் கர்த்தரைத் தொடர்ந்து தேடியபோது, நான் திரும்பிச் சென்ற பிறகும், எனது மென்பொருள் துறையில் நான் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்று தேவன் விரும்பியதை என் இருதயத்தில் தெளிவாக உணர்ந்தேன். நான் தொழிலில் ஈடுபடுவதை நிறுத்திவிடுவதற்கான எந்த வழிநடத்துதலும் கர்த்தரிடமிருந்து எனக்கு வரவில்லை. பல ஆண்டுகளாக, அதிலும் குறிப்பாக, நாங்கள் அமெரிக்காவில் இறுதியாகத் தங்கியிருந்த காலகட்டத்தில், கிறிஸ்தவக் கொள்கைகளின் அடிப்படையில் தொழில் செய்து, தேவனுடைய ராஜ்யத்திற்குப் பணத்தைக் கொண்டுவரும் ஒரு நிறுவனத்தைத் தொடங்க வேண்டும் என்ற வலுவான ஆசை எனக்குள் இருந்தது. என் இருதயத்தில் இந்த ஆசை நீண்ட காலமாக வளர்ந்துகொண்டிருந்தது, ஆனால் இதை எப்படிச் செய்வது என்றும் எப்போது செய்வது என்றும் எனக்குத் தெரியவில்லை.

இறுதியாக, நாங்கள் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல வேண்டிய நேரம் வந்தது. 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், தேசங்களை சந்திப்பதற்கான ஒரு மிகப்பெரிய தரிசனத்துடன் நாங்கள் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டோம் - ஆனால், ஊழியத்தைத் தொடர்ந்து

செய்வதற்குத் தேவையான அனைத்து பொருளாதாரத்தையும் நாங்கள் எப்படிப் பெறப் போகிறோம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. எங்களுக்கு ஆதரவாக இருந்த சில நண்பர்களின் உதவியால், எங்கள் ஊழியத்தை அமெரிக்க ஊழியத்துடன் இணைத்துக்கொண்டோம், ஆனால் நாங்கள் கொண்டிருந்த மிகப்பெரிய தரிசனத்தை நிறைவேற்றுவதற்கு அவர்களிடமிருந்து நாங்கள் பெற்றுக்கொண்டிருந்த பங்களிப்புகள் எங்களுக்குப் போதுமானதாக இல்லை!

நாங்கள் பெங்களூருக்கு வந்தபிறகு, 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு மென்பொருள் சேவை நிறுவனத்தைத் தொடங்குவதற்கு தேவன் கிருபையாய் எங்களுக்கு உதவி செய்தார். பிப்ரவரி 2001ல், எங்கள் திருச்சபையை - என் தந்தையின் வீட்டு வரவேற்பறையில் வைத்து, சிறிய அளவில் நாங்கள் தொடங்கினோம். மென்பொருள் நிறுவனம் தசமபாகமாக திருச்சபைக்குக் கொடுத்த பணத்தைக் கொண்டு — வாடகைக்கு ஒரு அறையெடுத்து குடிபெயர்தல், எங்களுக்குத் தேவையான உபகரணங்களை வாங்குதல், புத்தகங்களை அச்சிட்டு இலவசமாக விநியோகித்தல், தொலைக்காட்சி ஊழியம் செய்தல், மற்ற ஊழியங்களுக்கு உதவுதல் என எங்களால் இன்னும் நிறைய பணிகளைச் செய்ய முடிந்தது. எங்களுக்கு ஒரு மிகப்பெரிய தரிசனம் இருந்தது, பணப் பற்றாக்குறையால் எங்கள் கைகள் கட்டப்படவில்லை. பணிகளைத் தொடங்க எங்களிடம் போதுமான பணமும் அதிகமான பொருட்களும் இருந்தன.

திரும்பிப் பார்க்கையில், தேவன் என்னுடைய கல்வியையும் தொழிலையும் ஊழியத்திற்கு என்னைத் தயார்படுத்த எப்படிப் பயன்படுத்தினார் என்பதை என்னால் உணர முடிகிறது. எனது கல்வி மற்றும் தொழிலுடன் இறுக்கமாக ஒருங்கிணைக்கப்பட்டிருந்தவை கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளாக இருந்தன. வேலை என்பது தேவனுடைய சித்தத்தையும்

நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்கான ஒரு வாகனமும், தெய்வீக திட்டத்தின் ஒரு பகுதியுமாக இருக்கிறது என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்.

நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ, அதையே நீங்கள் செய்யும்போது உங்கள் வேலை ஒரு தடையாகவோ, அடிமைத்தனமாகவோ அல்லது அவசியமான தீமையாகவோ இருக்காது. தேவன் உங்களை வேலை செய்வதற்காக அழைத்தால், வேலையை அவசியமான தீமையாகவோ, அடிமைத்தனமாகவோ அல்லது தடையாகவோ கருதாதீர்கள். பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை விரிவுபடுத்துவதற்கு உங்கள் வாழ்க்கைக்கான தெய்வீக திட்டத்தின் ஒரு பகுதியாக அதைப் பார்க்கத் தொடங்குங்கள்.

5

ஏழு சரியான கண்ணோட்டங்கள்

எபேசியர் 6:5-10

**5 வேலைக்காரரே, (பணியாளர்கள்) நீங்கள் கிறிஸ்துவுக்குக்
கீழ்ப்படிகிறதுபோல, சரீரத்தின்படி உங்கள்
எஜமான்களாயிருக்கிறவர்களுக்குக்கும் (முதலாளிகள்) பயத்தோடும்
நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து,
6 மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு
ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக (பணியாளர்கள்),
மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்.
7 அடிமையானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன்
செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று
அறிந்து,
8 மனுஷருக்கென்று ஊழியம்செய்யாமல், கர்த்தருக்கென்றே
நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்.
9 எஜமான்களே (முதலாளிகள்), அப்படியே நீங்களும்,
வேலைக்காரருக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்து,
அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் (முதலாளி)
பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்டசபாதம்
இல்லையென்றும் அறிந்து கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள்.
10 கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின்
வல்லமையிலும் பலப்படுங்கள்.**

கொலோசெயர் 3:22-25

**22 வேலைக்காரரே (பணியாளர்கள்), சரீரத்தின்படி உங்கள்
எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு (முதலாளிகள்) எல்லாக்
காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க
விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல்,
தேவனுக்கு பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே
ஊழியஞ்செய்யுங்கள்.
23 நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே,
சுதந்தரமாகிய பலனைக் கர்த்தரால் பெறுவீர்களென்று அறிந்து,
24 எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல்
கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.**

[25] அநியாயஞ்செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; பட்சபாதமே இல்லை.

இவ்விரண்டு வேதாகமப் பகுதிகளும் விசேஷமாக அவற்றின் அறிவுறுத்தலில் ஒத்திருக்கின்றன. எஜமானன் மற்றும் வேலைக்காரன் (அடிமை) என்ற கருத்து நம் காலத்தில் இல்லை. இருப்பினும், "எஜமானர்" மற்றும் "வேலைக்காரன் (அடிமை)" என்ற கண்ணோட்டத்தை "முதலாளி" மற்றும் "பணியாளர்" என்ற கண்ணோட்டத்தில் நாம் புரிந்துகொள்ளலாம், பின்னர் அவை நம் நாட்களுக்குப் பொருத்தமான ஒன்றாக மாறும்.

வேலை தொடர்பான ஏழு கண்ணோட்டங்களை பவுல் முன்வைக்கிறார்

1) பணியாளர்களாகிய நாம், நமது முதலாளிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று பவுல் அறிவுறுத்துகிறார். நாம் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, நமது பணியிடங்களின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும்.

2) பிறகு, நம் முதலாளிக்கு மரியாதையையும் கனத்தையும் (பயத்துடனும் நடுக்கத்துடனும் (எபேசியர் 6:5)) செலுத்த வேண்டும். கலகம் பண்ணுகிறவர்களாக இருந்து, நம் முதலாளிகளை விட நமக்கு நன்றாகத் தெரியும் என்று நினைத்துக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, பணியிடத்தில் நம் மீது தலைமைத்துவத்தைக் கொண்டிருப்பவர்களை மதிக்கவும் கனம்பண்ணவும் வேண்டும்.

3) நமது உள்நோக்கத்தின் தூய்மையைப் பற்றி பவுல் குறிப்பிடுகையில், *"கபடமில்லாத இருதயத்தோடே"* (கொலோசெயர் 3:22) அல்லது "ஒரே மனதுடன்" என்று குறிப்பிடுகிறார். உங்கள் பணியில் கபடமில்லாமல் செயல்படுங்கள். "கபடமில்லாமல் இருத்தல்" அல்லது "ஒரே மனதுடன் இருத்தல்" என்ற வார்த்தைகள்,

"மறைத்து வைக்காமல் இருத்தல் அல்லது சுயத்தை-தேடாமல் இருத்தல்" என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தவை. இது "உதாரத்துவம், தாராள மனப்பான்மை, பெருந்தன்மை, எளிமை" என்றும் பொருள்படும்.

4) பவுல் நல்மனசாட்சியுடையவர்களாய் இருத்தலைப் பற்றியும் பேசுகிறார் - நம்மை யாரும் கவனிக்காத வேளையிலும் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். *"மனுஷரைப் பிரியப்படுத்துபவர்களாக பார்வைக்கு ஊழியம் செய்பவர்களாய் இருக்கக் கூடாது"* (கொலோசெயர் 3:22) என்று அவர் கூறுகிறார். நாம் கிறிஸ்துவின் பணியாளர்கள் என்பதே இதற்கான உந்துதலாகும். நாம் எந்த ஒரு தொழில் நிறுவனத்திலோ அல்லது கல்வி நிறுவனத்திலோ பணிபுரிந்தாலும் அந்த நிறுவனத்தில் ஊழியர்களாக இருப்பதற்கு முன்பு, நாம் கிறிஸ்துவின் ஊழியர்கள் என்பதை முதலாவது புரிந்துகொள்வது மிகவும் முக்கியமாகும். நமது பணியிடங்களில், நாம் கிறிஸ்துவின் பணியாளர்களாய் இருக்கிறோம். மேலும் நாம் கர்த்தருக்காக வேலை செய்வதால், நாம் கிறிஸ்துவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம், நமது வேலையை *"கர்த்தருக்காகச் செய்கிறோம், மனிதர்களுக்காக அல்ல"* (கொலோசெயர் 3:23). நமது பிரதான முதலாளியாகிய கிறிஸ்து நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். நாம் சரியான நேரத்தில் வேலைக்குச் செல்கிறோமா என்று அவர் பார்த்துக்கொண்டிருக்கிறார். நாம் எப்படி நேரத்தைக் கடைபிடிக்கிறோம் என்பதையும், நமது வருகை பதிவையும் மற்றும் வேலைக்குப் போகாமல் எப்படி விடுப்பு எடுத்துக்கொள்கிறோம் என்பதையும் அவர் பார்த்துக்கொண்டிருக்கிறார். உடல்நிலை சரியில்லை என்று சொல்லிவிட்டு, வேறு ஏதாவது செய்வதற்காக நாம் விடுமுறை எடுத்தாலும், நாம் வேலையைத் தவிர்த்துவிட்டதற்கான உண்மையான காரணங்கள்

அவருக்குத் தெரியும். நாம் வேலை நேரத்தை எவ்வாறு வீணடிக்காமல் பயன்படுத்துகிறோம் என்பதை அவர் பார்த்துக்கொண்டிருக்கிறார். நாம் உண்மையிலேயே வேலை செய்கிறோமா அல்லது நேரத்தை வீணடிக்கிறோமா? நாம் முயற்சிக்கும் அனைத்து "குறுக்கு வழிகளையும்" அவர் பார்க்கிறார். நாம் பொய்யான அறிக்கைகளையும் நேர்மையற்ற தகவல்களையும் வெளியிடுகிறோமா என்று அவர் பார்க்கிறார்.

5) நமது வேலையை *"மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்ய வேண்டும்"* (எபேசியர் 6:6) அல்லது *"கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய் செய்ய வேண்டும்"* (கொலோசெயர் 3:23) என்று பவுல் சொல்கிறார். நமக்கு ஒதுக்கப்பட்ட வேலையை நாம் மனப்பூர்வமாகச் செய்ய வேண்டும். மனமின்றி ஒரு செயலைச் செய்ய வேண்டாம், அதற்குப் பதிலாக, உங்களால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் செய்யுங்கள். உங்களிடத்தில் உள்ள சிறந்ததைக் கொடுங்கள். நீங்கள் அதை இயேசுவுக்காக செய்வதுபோல் செய்யுங்கள்.

6) பின்னர் பவுல் நமக்கு, *"நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்"* என்று அறிவுறுத்துகிறார் (எபேசியர் 6:7). முணுமுணுப்புடனும் குறைகூறிக்கொண்டும் உங்கள் வேலையைச் செய்யாமல், மகிழ்ச்சியுடன் செய்யுங்கள். மற்றொரு மொழிபெயர்ப்பில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது *"யார் கட்டளையிட்டாலும் சரி, நீங்கள் உண்மையிலேயே தேவனுக்கு ஊழியம் செய்கிறீர்கள் என்பதை மனதில் வைத்து, உங்கள் முகத்தில் புன்னகையுடன் வேலை செய்யுங்கள்"* (எபேசியர் 6:7).

7) கடைசியாக, *"கர்த்தரிடத்தில் உங்களது பலனை எதிர்பாருங்கள்"* (கொலோசெயர் 3:24) என்று பவுல் கூறுகிறார். கிறிஸ்து உங்களது உண்மையான முதலாளியாக இருப்பதால், உங்களால் முடிந்ததை

சிறப்பாகச் செய்தபின், அவர் உங்களுக்கு பலன் அளிக்க உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம். உங்கள் பலனுக்காக நீங்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்கும்போது, நீங்கள் உலக மக்களைப்போல நடந்து கொள்வதை நிறுத்திவிடுவீர்கள்! உலகத்தில் உள்ளவர்கள் பணியிடத்தில் முன்னேற்றத்தைக் காண்பதற்காக "மற்றவர்களைத் தள்ளி முந்தியடித்துக்கொண்டு" செல்வார்கள், ஆனால் விசுவாசிகளாகிய நாம் அமைதியாகவும், நிதானமாகவும், நல்ல இருதயத்துடனும் நம்மால் முடிந்ததை சிறப்பாகச் செய்ய வேண்டும். பரலோகத்தின் தேவன் நமக்கு பலன் அளிப்பார். பணியிடத்தில் நமக்கு பதவி உயர்வு அளிப்பதற்கு தேவன் தீர்மானித்திருந்தால், எந்த ஒரு மனுஷனும் அதில் குறுக்கிட முடியாது! உங்கள் பலனின் ஒரு பகுதி வரவிருக்கும் உலகத்தில் உள்ளது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் மறுபுறத்தில், அதாவது தேவனுடைய ராஜ்யத்தில் உங்கள் சுதந்திர வீதத்தில் வரும்போது, உங்களுக்கு முழுமையாக பலன் அளிக்கப்படும்!

முழுநேர ஊழியர்களுக்கான செய்தி

ஒருமுறை, பெங்களூரில் உள்ள போதகர் ஒருவர், எனது அலுவலகத்தில் நான் எத்தனை மணி நேரம் வேலை செய்கிறேன் என்று என்னிடம் கேட்டார். அதிகமாக வேலை இல்லாத வாரத்தில் 40 முதல் 50 மணிநேரம் வரை வேலை செய்கிறேன் என்று நான் அவரிடம் சொன்னேன். ஒரு முழுநேர போதகராக, அவர் சில சமயங்களில், ஒரு நாளைக்கு நான்கு மணி நேரம் கூட வேலை செய்வதில்லை என்று ஆச்சரியப்பட்டு ஒப்புக்கொண்டார். முழுநேர ஊழியர்களான போதகர்கள், சுவிசேஷகர்கள் மற்றும் பிற ஊழியங்கள் "உலகப்பிரகாரமான" வேலையில் உள்ள அதே பணி நெறிமுறைகளையும் பணி ஒழுங்குமுறைகளையும்

பின்பற்ற வேண்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஒரு நாளைக்கு குறைந்தது எட்டு மணிநேரமாவது வேலை செய்ய வேண்டும், வாரத்தில் குறைந்தது 40 மணிநேரமாவது ஊழியப் பணிகளைச் செய்ய வேண்டும்! வேலை செய்வதற்கு நல்ல பழக்கவழக்கங்களைத் தக்கவைத்துக்கொள்ள நீங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

6

உங்கள் வேலையைக் குறித்த வாக்குத்தத்தங்கள்

வேதாகமத்தில் வேலை தொடர்பான வாக்குத்தத்தங்கள் பல உள்ளன. கர்த்தர் நாம் செய்யும் கிரியைக்கு பலன் அளிப்பார் என்பதை முந்தைய அத்தியாயத்தில் நாம் பார்த்தோம். நம்முடைய பலனின் ஒரு பகுதியானது நாம் பரலோகத்தில் கர்த்தரைச் சந்திக்கும்போதும், நம்முடைய பலனின் மற்றொரு பகுதியானது நாம் வாழும் இந்த நிகழ்காலத்திலும் நமக்குக் கொடுக்கப்படும். நாம் இந்தப் பூமியில் இருக்கும்போது, நிறைவேற வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடிய சில வாக்குத்தத்தங்களை இங்கே காணலாம்.

உங்கள் கரங்களின் கிரியைக்கான ஆசீர்வாதம்

உபாகமம் 28:8

கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்.

உபாகமம் 28:12

ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார், நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்.

இவை பழைய உடன்படிக்கையின் கீழ் தேவனுடைய ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள். பழைய உடன்படிக்கையின் தேவன்தான் புதிய உடன்படிக்கையின்

தேவனாக இருக்கிறார். உடன்படிக்கைகள் மாறிவிட்டன, ஆனால் உடன்படிக்கையின் தேவனும், தமது ஜனங்களை ஆசீர்வதிக்கும் அவரது இருதயமும் அவரது சத்துவமும் மாறவில்லை! எனவே, துளியும் சந்தேகமின்றி, நம் கரங்கள் செய்யும் எல்லா வேலைகளிலும் நம் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் என்று எதிர்பார்க்கலாம். உங்கள் வேலையில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பார் என்று எதிர்பார்த்துக் காத்திருங்கள். ஒவ்வொரு நாளும் உங்கள் பணியிடத்திற்குள் நீங்கள் நுழையும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதம் உங்கள் மீது இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருங்கள்!

பதவி உயர்வு கர்த்தரிடமிருந்து வருகிறது

உபாகமம் 28:14

இன்று நான் உங்களுக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி நடக்கவும் அவைகளுக்குச் செவிகொடுத்துவந்தால், கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய்.

சங்கீதம் 75:6,7

6 கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது.
7 தேவனே நியாயாதிபதி, ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்.

தேவன் உங்கள் சார்பாக இருக்கிறார். நீங்கள் பதவி உயர்வு பெறுவதற்கு இடத்தை ஏற்படுத்திக் கொடுப்பவர் தேவனே ஆவார். வேலையில் நீங்கள் எடுக்கும் விடாமுயற்சியை தேவன் பார்க்கிறார், ஆகவே, அவர் உங்கள் பதவி உயர்வுக்கு நிச்சயம் இடத்தை ஏற்படுத்தித் தருவார். “முட்டி மோதிக்கொண்டு முன்னேறுதல்,” “உங்கள் சக ஊழியர்களை மட்டுப்படுத்துதல்” அல்லது உங்கள் முதலாளிகளுக்கு “லஞ்சம் கொடுத்தல்” போன்ற காரியங்களைச் செய்ய நீங்கள் முயற்சிக்க வேண்டியதில்லை. உங்களால் முடிந்தவரை விடாமுயற்சியுடன் வேலை செய்து, உங்கள்

பதவி உயர்வுக்கு கர்த்தர் வழி வகுக்குமாறு எதிர்பார்த்துக் காத்திருங்கள். நான் சிகாகோவில் ஒரு மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிந்துகொண்டிருந்தபோது, மிகவும் விரக்தியடைந்தவனாய் இருந்தேன். "ஆண்டவரே, எனக்கு பதவி உயர்வு தாரும், நான் முழுவதுமாகப் பயன்படுத்தப்படுகிறேன் என்று உணரவில்லை. அதிக பொறுப்புகளை என்னால் கையாள முடியும் என்றும் மக்கள் குழுவை வழிநடத்த முடியும் என்றும் நான் நம்புகிறேன்" என்று சொல்லி நான் ஜெபித்திருக்கிறேன். தேவனுடைய வார்த்தையின்படி, பதவி உயர்வு கர்த்தரிடமிருந்து வருகிறது என்று நான் நம்பினேன். சீக்கிரத்தில், எனது சூழ்நிலை மாறியது, எனது மேலாளர் என்னை ஒரு குழுவின் பொறுப்பாளராக நியமித்து, என்னை ஒரு குழுத் தலைவராக்கினார். பதவி உயர்வு கர்த்தரிடமிருந்து வந்தது!

உங்கள் உழைப்பின் பலனை அனுபவியுங்கள்

பிரசங்கி 3:13

அன்றியும் மனுஷர் யாவரும் புசித்துக் குடித்துத் தங்கள் சகலப் பிரயாசத்தின் பலனையும் அநுபவிப்பது - தேவனுடைய அநுக்கிரகம்.

சங்கீதம் 128:1,2

1 கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.

2 உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய், உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.

பிரசங்கி 5:18,19

18 இதோ, உயிரோடிருக்கும்படி தேவன் அருளிச்செய்த நாளெல்லாம் மனுஷன் புசித்துக் குடித்து, சூரியனுக்குக் கீழே தான் படும் பிரயாசம் அனைத்தின் பலனையும் அநுபவிப்பதே நலமும் உத்தமுமான காரியமென்று நான் கண்டேன், இதுவே அவன் பங்கு.

19 தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம்.

உங்கள் உழைப்பில் மகிழ்ச்சியடையும் திறனும் - உங்கள் உழைப்பின் பலனை அனுபவிப்பதும் - தேவனுடைய ஆசீர்வாதமும் அநுக்கிரகமுமாய் இருக்கிறது. உங்கள் உழைப்பின் பலனை நீங்கள் அனுபவிப்பீர்கள் என்று சொல்லி தேவனை நம்புங்கள். அநேகர் கடினமாக உழைப்பவர்களாய் இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் தங்கள் உழைப்பின் மூலம் பெறும் அனைத்தையும் காற்று அடித்து வாரிக்கொண்டு செல்வதுபோல் காணப்படுகிறது. அவர்களின் சம்பளம் பொத்தலான பைக்குள் செல்வதாகத் தோன்றுகிறது. மற்றவர்களிடம் நிறைய பணம் இருந்தாலும் சந்தோஷமும் சமாதானமும் அவர்களுக்கு இல்லை. நிறைய பணம் இருந்தாலும், விரக்தி, சண்டை சச்சரவு மற்றும் அதிருப்தி ஆகியவை மக்களிடம் காணப்படுகின்றன. நீங்கள் அப்படி இருக்க வேண்டிய அவசியமில்லை. உங்கள் உழைப்பின் பலனை நீங்கள் புசித்து, அனுபவிப்பீர்கள் மற்றும் களிகூருவீர்கள் என்று சொல்லி தேவனை நம்புங்கள்!

7
புதிய உலகில் வேலை செய்தல்

ஏசாயா 65:17-25

**17 இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும்
சிருஷ்டிக்கிறேன், முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை,
மனதிலே தோன்றுவதுமில்லை.
18 நான் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து
களிகூர்ந்திருங்கள், இதோ, எருசலேமைக் களிகூருதலாகவும், அதின்
ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன்.
19 நான் எருசலேமின்மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின்மேல்
மகிழ்ச்சியாயிருப்பேன், அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும்
அதில் இனிக் கேட்கப்படுவதில்லை.
20 அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத
கிழவனும் உண்டாயிரார்கள், நூறு வயதுசென்று மரிக்கிறவனும்
வாலிபனென்று எண்ணப்படுவான், நூறு வயதுள்ளவனாகிய
பாவியோ சபிக்கப்படுவான்.
21 வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள்,
திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப்
புசிப்பார்கள்.
22 அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள்
நாட்டுகிறதும், வேறொருவர் கனி புசிக்கிறதுமாயிருப்பதில்லை,
ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின்
நாட்களிருக்கும், நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின்
கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்.
23 அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை, அவர்கள் துன்பமுண்டாகப்
பிள்ளைகளைப் பெறுவதுமில்லை, அவர்களும், அவர்களோடேகூட
அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட
சந்ததியாயிருப்பார்கள்.
24 அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான்
மறுஉத்தரவுகொடுப்பேன், அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்.
25 ஓனாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும், சிங்கம் மாட்டைப்போல
வைக்கோலைத் தின்னும், புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும்,
என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை,
கேடுண்டாக்குவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.**

தானியேல் 7:13,14,18,22,27

13 இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்.

14 சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்.

18 ஆனாலும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜரிகத்தைப் பெற்று, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்றான்.

22 இந்தக் கொம்பு பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை மேற்கொண்டது என்று கண்டேன்.

27 வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரிகமும் ஆளுகையும் மகத்தவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம். சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்றான்.

வெளிப்படுத்துதல் 2:25-27

25 உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்.

26 ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன்.

27 அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான், அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள்.

பரலோகம் மற்றும் நித்தியம் எப்படி இருக்கும் என்பது குறித்து நம்மில் பலரும் வெவ்வேறு கருத்துக்களை உடையவர்களாய் இருக்கிறோம். நித்தியம் என்பது ஒரு நித்திய நித்தியமான விடுமுறைக்கான நேரமாக இருக்கும் என்றும், நமது பரலோக மாளிகைகளில் உள்ளும் புறமும் மேகம் மீது அமர்ந்து மிதந்து சென்று, தேவதூதர்களுடன் சேர்ந்து தேவனைத் துதித்துப் பாடுவது மட்டுமே நாம் செய்ய வேண்டிய வேலையாக இருக்கும் என்றும் நம்மில் சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறோம்! இருப்பினும்,

வரவிருக்கும் உலகில் நாம் எதை எதிர்பார்க்க வேண்டும் என்பதைப் பற்றிய சில விஷயங்களை வேதாகமம் நமக்கு வெளிப்படுத்துகிறது. புதிய வானமும் புதிய பூமியும் தோன்றிய பின்பும், தேவனுடைய ஜனங்கள் வீடுகளைக் கட்டிக்கொண்டிருப்பார்கள் என்றும், திராட்சைத் தோட்டங்களை நாட்டிக்கொண்டிருப்பார்கள் என்றும் ஏசாயா புத்தகத்தின் ஒரு பகுதி நமக்குக் காட்டுகிறது. நாம் உழைப்போம் மற்றும் நம் கைகளின் கிரியையின் பலனை அனுபவிப்போம். ஆகவே, புதிய உலகில் கூட நாம் "வேலை" செய்யப்போகிறோம்!

பூமியில் கிறிஸ்துவின் ராஜ்யத்தையும் ஆட்சியையும் நிர்வகிக்க தேவனுடைய ஜனங்கள் உதவுவார்கள் என்பதை தானியேல் புத்தகத்திலும் வெளிப்படுத்தல் புத்தகத்திலும் உள்ள பத்திகள் நமக்குக் காட்டுகின்றன. கிறிஸ்து வந்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கையில் தேவனுடைய ஜனங்கள் அவருடைய அரசாங்கத்தை நிர்வகிப்பதில் மும்முரமாக இருக்கப் போகிறார்கள். எனவே, நாம் எப்போதும் வேலை செய்யப் போகிறோம் என்று தோன்றுகிறது! நாம் சந்தோஷமாக வேலை செய்வோமாக. இது தேவனால் வடிவமைக்கப்பட்டதும், தேவனால் நியமிக்கப்பட்டதுமான செயலாகும். தேவன் தம்முடைய நோக்கங்களை பூமியில் நிறைவேற்றுவதற்கு உங்கள் பணி ஒரு வாகனமாக மாறட்டும்.

உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம் (கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார் - உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது - அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்" **(அப்போஸ்தலர் 10:43).**

"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.

இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.

இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.

இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.

ஆமென்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு திருச்சபையும்,** ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், தேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்து ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள்

நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, **apcwo.org/locations** ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது **contact@apcwo.org** க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses—Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Praying in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work—Its Original Design

புதியபுத்தகங்கள்தொடர்ந்துவெளியிடப்படுகின்றன.PDF,ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய **apcwo.org/books** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு **apcwo.org/sermons** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

கிறிசாலிஸ் ஆலோசனை மையம்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் ஆலோசனை மையமானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில்ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

இளம் பிராய நடத்தை

பிறரோடு இணைக்கக் குறைபாடு

உறவுமுறை சவால்கள்

கல்வியில் பின்தங்கிய நிலை

தொழில் தொடர்பான பிரச்சினைகள்

குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்குப் பின்

பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்

நடத்தையில் சீர்கேடு

ஆளுமை குறைபாடு

உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்

மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி

மது / போதைப்பொருளுக்கு அடிமை

ஆவிக்குரிய போராட்டங்கள்

வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை

கிரிசாலிஸ் ஆலோசனை சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

வலைதளம்: chrysalislife.org
தொலைபேசி: +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998
மின்னஞ்சல்: counselor@chrysalislife.org

கிறிசாலிஸ் ஆலோசனை என்பது ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் 'கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்' ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "ஆல் பீப்பிள்ஸ் சர்ச்"க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

வங்கிக் கணக்கின் பெயர்: All Peoples Church
வங்கிக் கணக்கு எண்: 50200068829058
IFSC குறியீடு: HDFC0004367
வங்கியின் பெயர்: HDFC வங்கி, 7M/308 80 Ft Rd, HRBR லேஅவுட், கல்யாண் நகர், பெங்களூரு, கர்நாடகா 560043

கவனத்தில் கொள்ளவும்: *ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்ஸ் சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* ***apcwo.org/give*** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.

நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

DOWNLOAD THE FREE APP!

Search for
"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play



A daily 5-minute video devotional.
A daily Bible reading and prayer guide.
5-minute Sermon summary.
Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.
Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.

IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி

apcbiblecollege.org

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்.

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், திங்கள் முதல் வெள்ளி வரை, இந்திய நேரப்படி காலை 9:00 முதல் நண்பகல் 12 மணி வரை (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

இணைய வழியில் விண்ணப்பிக்கவும், மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

திருமணம் தேவனால் ஏற்படுத்தப்பட்டது என்பதை நாம் அனைவருமே நம்பி, அதை அனுபவிக்கிறோம்.

அதுபோல, திருச்சபை என்பதும் தேவனால் ஏற்படுத்தப்பட்டது என்பதை அறிந்து, அதையும் சந்தோஷமாக அனுபவிக்கிறோம்.

அதுபோலவே, வேலை தேவனால் ஏற்படுத்தப்பட்டது என்பது நமக்கு ஒரு நல்ல செய்தியாகும்.



All Peoples Church & World Outreach
319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org